முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1225

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.02.2023, ஞாயிற்றுக்கிழமை

1. கருணையே வடிவான அரங்கனே
கலியின் கொடுமை தீர்க்கும் தேசிகனே
வரம்பல தந்து உலகமக்களை மீட்க
வள்ளலாக வந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞானஅறிவுரை ஆசி
சிரம் தாழ்த்தி சிரம் வணங்கி உலகோர் உன்திருவடி பற்றி சித்திகள் வேண்டினால்
ஆறுமுகன் என் தயவாலே உத்தமமாய் சித்திக்கும்
இந்த கலியுகத்தில் உன் தர்மத்தில் உதவி தொடர்ந்து வந்தால்
3. வருகவே அவர்கள் வினைகளெல்லாம் அகன்றோடி
வையகத்தில் ஞானிகளாகும் வாய்ப்பு
முருகப்பெருமான் யானே தந்தருள்வேன்
முழுமை ஞானிகளாக அவர்கள்எல்லாம் சிறந்து
4. சிறந்து அரங்கன் உன்வழி
சித்திகள் அடைய ஆசிகள் உண்டுஉண்டு
பரந்த இந்த பேருலகில் உன்வழி
பலகோடி ஞானியர்கள் உருவாக இருக்க
5. இருக்கவே அரங்கன் உன்ஆசி பெற்ற யாவருக்கும் இலகுவாய் இந்த சித்தி கனியக்கூடும்
கூடவே அரங்கன் நீ காட்டும் குறைவில்லாத சன்மார்க்கத்தை
நாடெங்கிலும் மக்கள் ஏற்றால் போதும்
ஞானயுக மாற்றமாக இனிதே உலகமாற்றமே நடந்தேறும்
6. நடந்தேற ஆறுமுகன் யான்
நாளும்நாளும் அரங்கன் உமக்கு சக்திகள் கூட்டிவர
இடரின்றி உன்வழி உலகோர்
என்தீட்சை பெற்றால் போதும் எங்கும் அற்புதம் நிகழும்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–